Üî¤è õ¤¬ô «è££¤ò ãôî£ó£¢ î¤¼õ£÷£.¢ «îõ¤ °é¢°ñ£ ®«óì£¢ú¢ ªê½î¢î«õí¢®ò åð¢ð ¬õð¢¹î¢ªî£¬è (20 êîõ¦îñ¢) ¼.1,43,400/- õÅô¤î¢¶ ªêù¢¬ù ñ£ïèó£ì¢ê¤ è¼×ôî¢î¤ô¢ ªê½î¢¶ê¢ê¦ì¢´ Íôñ¢ 23.01.09 Üù¢Á (ï.«è£.âí¢ ºîô¢ õ¬ó) ªê½î¢îð¢ðì¢´õ¤ì¢ì¶. ð¤ù¢ù¬ïï¢î ãôî£ó£¢ Ü¬ùõ¼è¢°ñ¢ «ìõí¤î¢ªî£¬è (õ¬ó¾ è£«ê£¬ô) ãôñ¢ º®ï¢î¾ìù¢ î¤¼ñ¢ð Ü÷¤è¢èð¢ðì¢´õ¤ì¢ì¶.

ªîù¢ ªêù¢¬ù ðí¤ñ¬ùò¤ô¢ Þô°óè õ£èù ðí¢ìèê£¬ôò¤ô¢ à÷¢÷ 114 õ¬èò£ù èö¤¾ ªêò¢òð¢ðì¢ì ðòùø¢ø àî¤£¤ð£èé¢è¬÷ õ£é¢°õîø¢° ãôî¢î¤ô¢ Üî¤è õ¬ô «è££¤ò ãôî£ó£¢ î¤¼õ£÷£¢. «îõ¤ °é¢°ñ£ ®«óì£¢ú¢ Üõ£¢èÀè¢° à÷¢÷¶ à÷¢÷ð® õ¤¬ôò¤ô¢ õ¤ø¢ð¬ù ªêò¢òô£ñ¢ âù è¼î¢¶ ªî£¤õ¤è¢èð¢ð´è¤ø¶.

எனவே,

1. Þòï¢î¤ó ªð£ø¤ò¤òô¢ ¶¬øò¤ù¢ è¦ö¢ Þòé¢°ñ¢ ªîù¢ ªêù¢¬ù ðí¤ñ¬ùò¤ô¢ Þô°óè õ£èù ðí¢ìèê£¬ôò¤ô¢ à÷¢÷ «ñø¢Ãøð¢ðì¢ì 114 õ¬èò£ù èö¤¾ ªêò¢òð¢ðì¢ì ðòùø¢ø àî¤£¤ð£èé¢è¬÷ ðòùø¢ø¬õ âù è¼î¾ ªêò¢ò¾ñ¢,

2. ªîù¢ ªêù¢¬ù ðí¤ñ¬ùò¤ô¢ Þô°óè õ£èù ðí¢ìèê£¬ôò¤ô¢ à÷¢÷ 114 õ¬èò£ù èö¤¾ ªêò¢òð¢ðì¢ì ðòùø¢ø àî¤£¤ð£èé¢èÀè¢° ªî£ö¤ô¢ ¸ì¢ðè¢°¿ ï¤£¢íò¤î¢î ªñ£î¢î ñî¤ð¢¹ ¼.4,30,987/- è¢° °¬øò£ñô¢ à÷¢÷¶ à÷¢÷ð® õ¤¬ôò¤ô¢ õ£é¢°õîø¢° ãôî¢î¤ô¢ Üî¤è õ¤¬ô ¼.7,17,000/- «è££¤ò ãôî£ó£¢ î¤¼õ£÷£¢ «îõ¤ °é¢°ñ£ ®«óì£¢ú¢ Üõ£¢èÀè¢° õ¤ø¢ð¬ù ªêò¢ò¾ñ,

3. «ñø¢èí¢ì ðòùø¢ø àî¤£¤ð£èé¢èÀè¢° õ¤ø¢ð¬ù ªêò¢»ñ¢ ªð£¼ì¢´ ãø¢èù«õ ªê½î¢îð¢ðì¢ì åð¢ð ¬õð¢¹î¢ªî£¬è (20 êîõ¦îñ¢) ê£¤èì¢® ñ¦îñ¢ ªê½î¢î«õí¢®ò õ¤¬ô ªî£¬è ñø¢Áñ¢ õ¤ø¢ð¬ù ªêò¢òð¢ð´ñ¢ «ïóî¢î¤ô¢ Üºô¤½÷¢÷ õ¤ø¢ð¬ù õ£¤¬ò»ñ¢ (ªñ£î¢î õ¤¬ôè¢°) îù¤î¢îù¤ò£è ªê½î¢¶ê¦ì¢®ù¢ Íôñ¢ ªêù¢¬ù ñ£ïèó£ì¢ê¤ è¼×ôî¢î¤ô¢ ªê½î¢î¤ ÜÂñî¤ ªðø¢Áè¢ªè£í¢´ ªêô¢ô¾ñ¢

ñù¢øî¢î¤ù¢ ÜÂñî¤ «õí¢® நிலைக்குழு (பணிகள்) முலமாக êñ£¢ð¤è¢èð¢ð´è¤ø¶.

> **“20.05.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.39/2009, நாள்: 20.05.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/012/2008</u>**

## 28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :131/2009 பொருள் எண்.53

### சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலைக்கு வணிகவளாகங்களின் கடை ஒதுக்கீடு

மண்டலம்–5, வார்டு எண்.67, பிரிவரி சாலை திட்டம்–1 வணிகவளாகத்தில் காலியாக உள்ள கடை எண்.22/A னை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு 06.10.2007 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தை விலை அடிப்படையில் சதுரஅடி ரூ.15/– க்கு வாடகை செலுத்தவும், 12 மாத வாடகை முன் பணம் செலுத்திடவும், சம்மதம் தெரிவிக்குமாறு 22.05.2008 நாளிட்ட கடிதம் கூட்டுறவு பண்டகசாலைக்கு அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து கூட்டுறவு பண்டகசாலையின் இணைப்பதிவாளர்/தனி அலுவலர் அவர்கள் சதுர அடி ரூ.15/–க்கு வாடகை செலுத்தவும், 12 மாத முன்பணம் செலுத்தவும் இசைவு தெரிவித்து 18.06.2008 நாளிட்ட கடிதம் இத்துறைக்கு அனுப்பியுள்ளார்.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், மேற்கண்ட வணிக வளாகத்தில் காலியாக உள்ள இக்கடையானது 703 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். 2005–ம் ஆண்டு முதல் ஏலம் கோரி இக்கடையை எவரும் ஒதுக்கீடு செய்ய முன்வரவில்லை.

மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.285, நாள்.29.4.85–ல் அரசு துறைகள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அரசினால் பராமரிக்கும் (undertaking ) துறைகள் நகராட்சிக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகை முறையில் ஒதுக்கீடு பெறப்படும்போது பொது ஏலத்தில் கலந்துக்கொள்ளாமல் அரசு பொது பணித்துறையால் (Public Works Department) நிர்ணயிக்கும் கட்டணத்தில் ஒதுக்கீடு பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் ஏலம் முறையில் ஒதுக்கீடு செய்யாமல் தற்போதைய சந்தை விலை நிர்ணயக் குழுவால் (Market Rate Fixed by the Committee) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சதுர அடி ஒன்றுக்கு ரூ.15/– என்ற விலையின் அடிப்படையில் மண்டலம்–5ல் உள்ள பிரிவரி சாலை வணிக வளாகத்தில் கடை எண்.22/A னை சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலைக்கு ( - A Unit of Park Town Co-op Wholesale Stores Ltd No.X-405) ஒதுக்கீடு வழங்கிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.5.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.50, நாள்: 22.5.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/737/2008**
**ஆணையர் அவர்களின் 25.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :132/2009 பொருள் எண். 54

**தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி கழகத்தின் KfW– நிதியின் கீழ் கடனுதவி பெறப்பட்ட திட்டங்கள் – சுற்றுச்சூழல் செயல் விளைவுகள் – தயாரிக்க TNUIFSL மூலம் TNUIFSL KfW கடனுதவியின் ஒரு பகுதியாக தொழில்நுட்ப உதவி மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவர் தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதி கோரல்**

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி கழகத்தின் KfW நிதியின் மூலம் கீழ்கண்ட 8 இடங்களில் மேம்பாலம் / சுரங்கப்பாதை உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிக்காக ரூ. 5243.77 லட்சம் கடனுதவி அனுமதி பெறப்பட்டுள்ளது.

1. அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்தூர் சாலையில் உயர்மட்ட பாலம்.
2. மணியக்கார சத்திரத் தெருவில் ஸ்டான்லி மருத்துவமனை அருகே இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை.
3. வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை.
4. கத்திவாக்கம் நெடுஞ்சாலை – காக்ரேன் பேசின்சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம்.
5. ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை.
6. இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம்.
7. பெரம்பூர் மேம்பாலம்.
8. கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை.

இக்கடனுதவி அனுமதி சில விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தது. அவற்றில் ஒன்று TNUIFSL நிறுவனம் அமைத்து வைத்துள்ள சுற்றுச்சூழல் மற்றும் சமூக வழிமுறைகளின்படி சென்னை மாநகராட்சி பாலத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பது.

இக்கடனுதவி பெறுவதற்கான தொடக்க அறிக்கையினை சமர்ப்பிப்பதற்காக, 05.12.2008 அன்று TNUIFSL நிறுவனத்தின் சுற்றுக்சூழல் மற்றும் சமூக மேலாளர்களும் சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையின் உதவி செயற்பொறியாளரும் 8 பாலப் பணியிடங்களையும் நேரில் பார்வையிட்டனர்.

பார்வை 2ல் கண்டுள்ள TNUIFSL நிறுவனத்தின் 15.12.2008 கடிதத்தில் ஒவ்வொரு பாலத் திட்டத்தின் தொடக்க அறிக்கையை வழங்கியுள்ளார்கள். இதில், சென்னை மாநகராட்சி சுற்றுச்சூழல் செயல் விளைவுகள் (Environment Assessment) குறித்து ஆய்வுகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வலியுறுத்தியுள்ளார்கள்.

பார்வை 3ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தின் மூலம் TNUIFSL நிறுவனத்திற்கு தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் சுற்றுச்சூழல் செயல் விளைவுகள் (Environment Impact Assessment) அறிக்கையை TNUIFSL kfw கடனுதவியின் ஒரு பகுதியான தொழில் நுட்ப உதவி (Technical Assistance) பகுதியின் மூலம் தயாரிப்பதற்கு ஒப்புக்கொண்டு அவ்வண்ணம் தயாரித்து தர TNUIFSL நிறுவனத்திடம் கோரப்பட்டது.

துரித சுற்று சூழல் செயல் விளைவு மதிப்பீடு (Rapid Environmental Impact Assessment) மேற்கொள்ள TNUIFSL மூலம் KfW கடனுதவியின் ஒரு பகுதியாக தொழில்நுட்ப உதவி மானிய நிதியின் கீழ் கலந்தறிதற்குரியவரை நியமிக்கக் கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே கீழ்க்கண்டவற்றிற்கு

1. TNUIFSL-ன் KfW நிதியிலிருந்து கடனுதவி அனுமதி பெற்றுள்ள 8 பாலத்திட்டங்களுக்கு துரித சுற்று சூழல் காப்பு அறிக்கை தயாரிக்க அனுமதியும்.

2. இப்பணியினை TNUIFSL மூலம்TNUIFSL - ன்KfW கடனுதவியின் ஒரு பகுதியான தொழில் நுட்ப உதவி மானிய நிதியின் மூலம் கலந்தறிதற்குரியவரை தேர்வு செய்து மேற்கொள்ள அனுமதியும்.

1 முதல் 2 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (மற்றும்) நிதி) மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘20.05.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.35/2009, நாள்: 20.05.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.5.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.52, நாள்: 22.5.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>வ.து.ந.க.எண்.எம்4/4447/2009</u>
<u>ஆணையாளரின் 20.5.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :133/2009 பொருள் எண்.55

**<u>தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் பணி செய்ய 1.6.2009 முதல் 31.5.2010 வரை ஒரு வருடத்திற்கு கால நீட்டிப்பு செய்ய அனுமதி</u>**

மன்றத் தீர்மான எண்.586/03, நாள்.20.10.2003ன்படி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு 1.12.2003 முதல் 31.11.2004 வரை அனுமதி வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.366/04, நாள்.30.9.2004ன்படி ஜுன் 2004 முதல் மே 2005 வரை உரிமக் காலத்தை நீட்டிப்பு செய்து தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.174/05, நாள்.18.5.2005ன் படி ஜுன் 2005 முதல் மே 2007 வரை கால நீட்டிப்பு செய்து தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.267/07, நாள்.28.5.2007ன்படி 1.6.2007 முதல் 31.5.2009 வரை கால நீட்டிப்பு செய்து தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

19 புதிய இடங்கள் தேர்வு செய்து அவ்விடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு மன்றத் தீர்மான எண்.55/2008, நாள்.31.1.2008ல் அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு செயலாளர், பொதுத் துறை மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் அவர்களின் 28.4.2009 நாளிட்ட கடிதத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் பணியில் ஈடுபடும் 175 முன்னாள் படைவீரர்கள் / சார்ந்து வாழ்பவர்கள் இவர்கள் வாழ்க்கை நலத்தை உயர்த்தவும், பாதுகாக்கவும் ஏற்கனவே உள்ள விதிமுறை மற்றும் நிபந்தனைகளின்படி இரண்டு வருடகளான 1.6.2009 முதல் 31.5.2011 வரை கால நீட்டிப்பு செய்து தரும்படி கோரிக்கை வைத்துள்ளார். இக்கோரிக்கையை ஏற்று 1.6.2009 முதல் 31.5.2010 வரை ஒரு ஆண்டுக்கு மட்டும் கால நீட்டிப்பு செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"22.5.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.55, நாள்: 22.5.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘பெரும்பாலான மன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்கட்சி தலைவர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு அளித்து பின் மண்டலத்திற்கு ஒரு ஒப்பந்தமென பத்து மண்டலத்திற்கு தனிதனியே ஒப்பந்தங்கள் கோருவதென முடிவெடுத்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.இ1/ 0556 /2009.
ஆணையர் அவர்களின் 19.05.2009 நாளிட்ட குறிப்பு

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :134/2009 பொருள் எண்.56

**பழுதடைந்த கட்டிடங்கள் இடிக்க அனுமதி**

மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86, அருணாச்சலம் தெருவில் 86வது கோட்ட அலுவலகம்செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலக கட்டிடம் செயல்பட்டு வரும் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து விட்டு, புதிய வார்டு அலுவலகம் கட்ட தீர்மான எண்.410/2008, நாள்:27.08.2008 ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. புதிய வார்டு அலுவலக கட்டிடம் கட்டுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, இக்கட்டிடத்தை ஒட்டி அமைந்துள்ள உடற்பயிற்சிக் கூடம், மாநகராட்சி துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவை இடநெருக்கடியாக அமைந்துள்ளதால், அவற்றையும் இடித்து விட்டு, போதிய இட வசதியுடன் இவை அனைத்தையும் ஒரே கட்டிடத்தில் செயல்படுத்த ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டலாம் என்று உத்தேசிக்கப்பட்டது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 1. | வார்டு–86, அருணலச்சலம் தெருவில் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சிக் கூடம் | கட்டிடத்துறை 2000–2001 | ரூ.4,76,113.39 | தரைதளம் 726 சதுரடி |
| 2. | வார்டு–86, அருணாச்சலம் தெருவில் உள்ள சத்துணவுக் கூடம் | கட்டிடத்துறை 2000–2001 | ரூ.4,46,933.12 | தரைதளம் 1398 சதுரடி |
| 3. | வார்டு–86, அருணாச்சலம் தெருவில் உள்ள மாநகராட்சி துணை மின் நிலையம் | கட்டிடத்துறை 1993–94 | ரூ.5,58,160.88 | தரைதளம்–1864 ச.அடி<br>முதல்தளம்– 786 ச.அடி<br>மொத்தம் = 2650 சதுரடி |

மேற்சொன்ன கட்டிடங்களை இடித்து விட்டு ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டி முடிக்கப்படும் வரை உடற்பயிற்சிக் கூடம், சத்துணவுக் கூடம் மற்றும் துணை மின் நிலையம் ஆகியவற்றை அடுத்தக் கட்டிடத்தில் உள்ள சமூதாயக் கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள அறைகளில் செயல்படுத்தலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86ல் அருணாச்சலம் தெருவில் இடிக்கப்பட உள்ள 86வது கோட்ட அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள உடற்பயிற்சிக் கூடம், துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவற்றையும் இடித்து அகற்றி விட்டு, அவ்விடத்தில் கட்டிடத்துறை மூலம் கோட்ட இளநிலை பொறியாளர் அலுவலகம், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர், வரி வசூலிப்பவர், மன்ற உறுப்பினர் மற்றும் குடிநீர் வாரிய பொறியாளர் ஆகியோருக்கு அலுவலக கட்டிடங்கள் மற்றும் போதிய இடவசதியுடன் உடற்பயிற்சிக் கூடம், சத்துணவுக் கூடம் மற்றும் துணை மின் நிலையம் ஆகியவற்றை கட்டவும் நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2009 அன்று தீர்மான எண். 11/09–ன் படி நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 22.05.2009 அன்று தீர்மான எண். 41/09–ன் படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மு.நீ.வ.து.ந.க.எண்.பி5/ 2134/2008
ஆணையாளரின் 20.05.2009 நாளிட்ட குறிப்பு

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :135/2009 பொருள் எண். 57

**திட்ட மதிப்பீடு**

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் 950 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. தற்போதுள்ள மழைநீர் வடிகால்வாய் திட்டம் மிகவும் பழமையானது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு சென்னை மாநகராட்சியும் பொதுப்பணித்துறையும் இணைந்து ஆர்.வி.அசோசியேட்ஸ் என்ற கலந்தறிதற்குரியவரை நியமித்து ஒருங்கிணைந்த வடிகால் தொகுப்பு குறித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இத்திட்ட அறிக்கை 4.12.2008 அன்று மாநில அரசின் குழுவில் ஒப்புதல் பெற்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு நகர்ப்புற வளர்ச்சித்துறையில் ஒப்புதல் பெறப்பட்டது. இந்த திட்ட அறிக்கை சென்னை மாநகர் முழுவதும் நிலஅளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது. சென்னை மாநகரம் 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளாக வகுக்கப்பட்டு அவை வடக்கு, மத்திய, கிழக்கு, தெற்கு ஆகிய நான்கு நீர்த்தேக்கப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டது. இவை மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் பெறப்பட்டன.
(அரசாணை எண். (ப) எண்.134, ந.நி.(ம) கு.வ. (ந.நி.–2) துறை, நாள். 26.03.2009 2) மற்றும் அரசாணை எண். (ப) எண்.138, ந.நி.(ம) கு.வ. (ந.நி.–2) துறை, நாள். 30.03.2009)

| வரிசை எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி ஒதுக்கீடு | பொதுப்பணித் துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப் பட்ட மொத்தத் தொகை | மத்தியஅரசில் ஒப்புதல் பெறப் பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிகளில்) | | | |
| 1 | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2 | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3 | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4 | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | மொத்தம் | 814.88 | 633.03 | 1447.91 | |

சென்னை மாநகராட்சி ஒதுக்கீடு ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும்.

இவை மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசாணைகள் பெறப்பட்டன. (அரசாணை எண். (ப) எண்.134, ந.நி.(ம) கு.வ. (ந.நி.–2) துறை, நாள். 26.03.2009 2) மற்றும் அரசாணை எண். (ப) எண்.138, ந.நி.(ம) கு.வ. (ந.நி.–2) துறை, நாள். 30.03.2009)

இந்தத் திட்டத்தில்

1) சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 16 கால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் 29.81 கி.மீ. நீளத்திற்கு ரூ. 159.01 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்.
2) புதிய மழைநீர் வடிகால்வாய்கள் 289.72கி.மீ நீளத்திற்கு ரூ. 343.45 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்
3) பழுதடைந்த மழைநீர் வடிகால்வாய்கள் மீண்டும் கட்டும் பணி 182.45 கி.மீ. நீளத்திற்கு ரூ. 276.28 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்
4) இப்பணிகள் படிப்படியாக மூன்று நிதியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

இது சம்பந்தமாக விரிவான திட்ட மதிப்பீடுகள் முறையே

1) வடக்கு நீர்த்தேக்கப்பகுதிக்கு ரூ.240.35 கோடியில்
2) மத்திய நீர்த்தேக்கப்பகுதிக்கு ரூ. 269.42 கோடியில்
3) கிழக்கு நீர்த்தேக்கப்பகுதிக்கு ரூ.137.63 கோடியில் மற்றும்
4) தெற்கு நீர்த்தேக்கப்பகுதிக்கு ரூ.130.89 கோடியிலும்

மேற்கூறிய நான்கு நீர்த்தேக்கப் பகுதிகளின் மொத்த தொகை ரூ.778.29–க்கு தொழில்நுட்ப ஒப்புதல்கள் பெறப்பட்டன.

இதற்கான மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.778.29 கோடியில் இப்பணிகள் கீழ்கண்ட 12 தொகுப்பு ஒப்பங்களாக கோரப்பட்டு படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

| நீர்ப்பிடிப்புப் பகுதி | பணித்தொகை<br>ரூ. கோடியில் |
|---|---|
| தொகுப்பு – 1 கொளத்தூர் நீர்ப்பிடிப்புப்பகுதி | 21.82 |
| தொகுப்பு –2 கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி | 92.88 |
| தொகுப்பு–3 ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப்பகுதி | 91.25 |
| தொகுப்பு–4 மாம்பலம், நந்தனம் நீர்ப்பிடிப்புப்பகுதி | 104.30 |
| தொகுப்பு–5 கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப்பகுதி | 74.88 |
| தொகுப்பு –6 விருகம்பாக்கம், அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப்பகுதி | 51.56 |
| தொகுப்பு –7 ராயபுரம் நீர்ப்பிடிப்புப்பகுதி | 25.33 |
| தொகுப்பு – 8 வடக்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி | 17.57 |
| தொகுப்பு – 9 மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி | 39.99 |
| தொகுப்பு – 10 தெற்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி | 34.25 |
| தொகுப்பு– 11 அடையாறு நீர்ப்பிடிப்புப்பகுதி | 71.46 |
| தொகுப்பு – 12 வேளச்சேரி நீர்ப்பிடிப்புப்பகுதி | 40.65 |
| **மொத்தம்** | **665.94** |

இந்த பொருள் குறித்து தொழில்நுட்ப குழு (மநீவது) ஒப்புதலும் பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.410 கோடிக்கு TUFIDCO நிறுவனத்திடமிருந்து ரூ. 100 கோடி நகர்ப்புற கட்டமைப்பு அபிவிருத்தி நிதியின் கீழ் 4% வட்டி விகிதத்தில் கடன் உதவி பெறப்படும். TNUIFSL நிறுவனத்திடமிருந்து ரூ.150 கோடி நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து 9.5% வட்டி விகிதத்தில் பெறப்படும். மீதமுள்ள தொகைக்கு வீட்டு வசதி துறையின் நகர்ப்புற கட்டமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து பெறப்படும்.

தொழில்நுட்பக் குழு (சென்னை மாநகராட்சி) இவற்றை பரிசீலனை செய்து கீழ்கண்ட கருத்துக்களை தெரிவித்துள்ளது.

1) கால்வாயின் மட்டம் தொடர்ச்சியாகவும், கடைசி இணைப்பு வரை நீரின் வாட்டம் சரியாக இருக்குமாறும் தொகுப்புகள் இருக்க வேண்டும். மட்டம் அளவுகளில் இடைவெளி அல்லது எதிர்வாட்டம் இல்லாமல் இருக்க வேண்டும்.
2) ஒவ்வொரு தொகுப்புப் பணியும் முழுமையாக செய்யப்பட்டு, மற்றொரு தொகுப்பில் உள்ள பணிகள் நடைபெறும் பொழுது, முடிந்த பணிகள் உபயோகமாக இருக்குமாறு நிறைவு பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு தொகுப்புப் பணியில் உள்ள சேகரிப்புக் கால்வாய், உள்ளூட்டுக் கால்வாய் மற்றும் இணைப்புக் கால்வாய்களின் கட்டுமானம் கடைசி இணைப்பு வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.
3) மூலதனத் துறையின் மூலமோ அல்லது மண்டலங்களின் மூலமோ பணியின் அளவுகள் எடுக்கப்படும் பொழுதும், மற்றும் பணிகள் கண்காணிக்கப்படும் பொழுதும் எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஒப்பத் தொகுப்பின் அளவுகள் இருக்க வேண்டும்.
4) நிறைய ஒப்பந்ததாரர்கள் கலந்து கொள்வதற்கு தகுந்த மாதிரியும், ஒப்பங்கள் பெற்று தரமான பணிகளை செய்வதற்கு தகுந்த மாதிரியும் ஒப்பங்கள் தொகுக்கப்பட வேண்டும்.

மழைநீர் வடிகால் துறையின் இத்திட்டத்தில் ஒவ்வொரு நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள சேகரிப்பு, உள்ளூட்டு மற்றும் இணைப்புக் கால்வாய் பணிகளையும் தனித்தனியாக மேற்கொள்ளலாம். ஒரு நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் நிறைவு பெறும்பொழுது மற்ற நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலோ அல்லது தொடங்கப்படாமலிருந்தாலோ பணி முடிந்த நீர்ப்பிடிப்பு பகுதி செயல்படுமாறு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நீர்ப்பிடிப்பு தொகுப்பிலும், சேகரிப்புக் கால்வாய்கள், பிரதான கால்வாய்கள், நீர்வழிக் கால்வாய்கள் பணிகள் உள்ளன. ஒரே ஒப்பந்ததாரர் இப்பணிகளை மேற்கொள்ளும் பொழுது மட்டம் அளவுகளில் எவ்வித பாதிப்பும் இல்லாமல் தொடர்ச்சியாக இருக்கும்.

இறுதிப்பட்டியல் பணம் பட்டுவாடா செய்வதற்கு முன், ஒரு நீர்ப்பிடிப்பு தொகுப்பில் உள்ள முழு வடிகால்வாய்களின் தொகுப்பையும் சரிபார்க்க வேண்டும் மற்றும் குறைகளை சரிசெய்ய வேண்டும்.

ஒரே நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள பணிகளை பல ஒப்பந்ததாரர்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் பொழுது மட்டம் அளவுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமாறு ஒருங்கிணைப்பது சிரமமாக இருக்கும்.

ஒரே நீர்ப்பிடிப்பு பகுதியில் பல ஒப்பங்கள் கோரப்பட்டால் ஒப்பங்கள் சரியாக ஒப்புதல் பெறமுடியாமல் போகும் தருணத்தில், ஒரு பகுதி கால்வாய் தொகுப்பில் மட்டும் பணிகள் முடிவடைந்து மழைநீர் வடியாமல், பயனில்லாமல் போகும், மற்றும் கால்வாய் தொகுப்பில் நிறைய இணைப்புகள் விடுபட்டுப் போக வாய்ப்புள்ளது.

எனவே, மேற்கூறிய காரணங்களால் நீர்ப்பிடிப்பு பகுதி அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோர தொழில்நுட்பக் குழுமம் (சென்னை மாநகராட்சி) ஒப்புக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு நீர்ப்பிடிப்பு பகுதியின் அலுவலக பணி மதிப்பீடு ரூ. 21.00 கோடி முதல் ரூ.104.00 கோடி. சராசரி தொகை ரூ.60.00 கோடி. இது உள்ளூர் மற்றும் பெரிய நிறுவனங்கள் பங்குபெற சரியான தொகை ஆகும். நிறைய நிறுவனங்கள் பங்குபெறுவதற்கு, ஒரு நீர்ப்பிடிப்பு பகுதிக்கு மூன்று பேர் சேர்ந்து பங்கு பெறலாம். ரூ.50.00 கோடிக்கு மேல் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதியில் சர்வதேச அளவில் போட்டி ஒப்பங்கள் கோரலாம்.

ஒப்பந்ததாரர், தன்னுடைய தகுதிக்கு மீறி ஒப்பங்கள் எடுத்து பணிகள் தாமதிக்காமல் இருக்க, ஒப்ப புத்தகத்தில் 'ஒப்ப தகுதி' (Bid Capacity) என்ற ஒரு விதியை சேர்க்குமாறு குழுமம் பரிந்துரைத்துள்ளது.

பணிகளை சரியாக நடைமுறைப்படுத்த, நீர்வழிக் கால்வாய் மேம்பாட்டு பணிகளை மூலதன துறையின் மூலமாக மேற்கொள்ளவும் மற்றும் பிரதான, உள்ளூட்டு, சேகரிப்பு மழைநீர் வடிகால்வாய்கள் எந்த நீர்ப்பிடிப்பு பகுதியில் இருந்தாலும் அந்தந்த மண்டலங்களின் மூலம் மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. இதனால் பணிகள் துரிதமாக மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

இது ஒரு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணியாக இருப்பதால் பணியின் தரம் இறுதி வரை சரியாக கவனிக்கப்பட வேண்டும். மத்திய அரசின் தேசிய நகர்ப்புற வளர்ச்சி துறையின் ஒப்புதல் குழுமம் தரமான முறையில் பணிகளை செய்ய வற்புறுத்தியுள்ளது. மேலும் பணிகளின் பல்வேறு நிலைகளில் தரத்தை சரிபார்க்குமாறு கூறியுள்ளது. எனவே இத்திட்டத்தின் எல்லா பணிகளையும் துறைகளின் மூலம் மேற்பார்வை செய்வதோடு கூடுதலாக மூன்றாவது நிறுவனம் மூலம் தரக்கட்டுப்பாடு மற்றும் தர நிர்ணயம் மேற்பார்வை செய்ய பரிந்துரைத்துள்ளது.

நிறைவாக இத்திட்டத்தில் சிறிய மற்றும் பெரிய வடிகால் தொகுப்புப் பணிகள் சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப்பணித்துறையின் மூலம் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்படுவதால் பணிகள் தொய்வில்லாமல் நடைபெற அவ்வப்பொழுது பொதுப்பணித்துறையுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என சென்னை மாநகராட்சி தொழில்நுட்பக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த பொருள் சென்னை மாநகராட்சி சட்டம் 1919–ன்படி விதி 80 (2)–ன் கீழ் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) –ன் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.05.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.40/2009, நாள்: 20.05.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.5.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.54, நாள்: 22.5.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.நீ.வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.ஜி2/919/2008.**
**ஆணையாளர் அவர்களின் 25.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :136/2009 பொருள் எண்.58

**மன்ற உறுப்பினர் குடும்ப பாதுகாப்பு நிதி உயர்த்தியது சம்மந்தமாக**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 17.06.2008 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் அறிவித்துள்ளவாறு காலமான மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் இரா.ஸ்ரீதர், வார்டு எண்.18 மற்றும் சுப்பிரமணி (எ) மாரிமுத்து, வார்டு எண்.44 அவர்களின் குடும்பத்தாருக்கு குடும்ப பாதுகாப்பு நிதியினை, அரசு ஆணையையும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதியையும் எதிர்நோக்கி ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி வழங்கியமைக்கும் மற்றும் இனி வரும் காலங்களில் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.1,00,000/–ஆக வழங்குவதற்கும் மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி பொருள் குறித்து அரசு தனது கடிதத்தில் இச்செயற்குறிப்பின் மீது அரசளவில் மேல்நடவடிக்கை தேவையில்லை என தெரிவித்தும், இப்பொருள் குறித்து தாங்களே தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளது.

அரசு கடிதத்தின்படி காலஞ்சென்ற இரண்டு மன்ற உறுப்பினர்களின் குடும்பத்தாருக்கு குடும்ப பாதுகாப்புநிதி உயர்த்தி வழங்கியமைக்கும், மற்றும் இனிவரும் காலங்களில் மன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.1,00,000/–ஆக வழங்குவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.05.2009 அன்று தீர்மான எண்.56/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ.6.ந.க.எண்.ஆ1/910/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :137/2009 பொருள் எண்.59

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

திரு.சி. முனுசாமி, உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, மண்டலம்–6 அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2009 முதல் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளார். இவர் சென்னை மாநகராட்சியில் 27.8.1974 ல் வாடகை வசூலிப்பவராக பணியில் சேர்ந்தார். பின்பு, வரி வசூலராகவும், உரிமம் ஆய்வாளராகவும், வரி மதிப்பீட்டாளராகவும் பதவி உயர்வு பெற்று 13.12.2007 முதல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருகிறார். துறை பூர்வமான விசாரணை ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் ஏதுமில்லை. விழிப்பு அலுவலரின் குறிப்பில் இவர் மீது விசாரணை நிலுவயில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஓய்வு பெற்ற பின்னர் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை ஏதேனும் நிலுவையில் இருப்பின், அதன் காரணமாக ஏற்படும் நிதி இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யலாம்.

தனியர் வகுப்பு–2 ஐ சார்ந்த அலுவலராததால் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே, தணிக்கைத் தடை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் மற்றும் தனிப்பட்ட அலுவலர் முன்பண நிலுவை காரணமாக ஏற்படும் நிதி இழப்பு இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி திரு. சி. முனுசாமி, உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–6 அவர்களை 31.05.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில், இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு, இதற்கு நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்